திரு. டி. கார்ச்சா கவுடர் : நம் மாநிலத்தில் 1 கோடி 30 லட்சத்து சொச்சம் அளவுக்குத் தென்னை மரங்கள் இருந்தும் தற்போது தேங்காயின் விலை இவ்வளவு அதிகமாக ஆகியிருப்பதற்குக் காரணம் என்ன ?

கனம் திரு. பூ. கக்கன் : காரணம் சில இடங்களில் தேங்காயை அதிகமாக உபயோகிக்கிறார்கள், சாப்பிடுகிறார்கள். வெளியிடங்களுக்கும் தேங்காய் ஏற்றுமதி செய்யப்படுகிறது என்று நினைக்கிறேன். இப்போது இருப்பதைவிட இன்னும் தேங்காய் உற்பத்தி அதிகமாகிவிட்டால் விலை குறையக்கூடும்.

திரு. எம். எஸ். மணி : இப்படிப்பட்ட நோய்கள் தென்னை மரங்களில் வருவதற்குக் காரணம் என்ன என்று பார்க்கும்போது, அதற்குத் தென்னை மர விவசாயிகள் சொல்லுகின்ற காரணம், முன்னால் தென்னை மரத்தில் கள் இறக்குவதற்காக கலயம் கட்டப்பட்டு வந்தது. அதில் வண்டுகள், பூச்சிகள் விழுந்துவிடும். இப்போது அம்மாதிரி கலயங்கள் இல்லாததால் தென்னங் குருத்துக்களைப் பூச்சிகள், வண்டுகள், தின்று விடுகின்றன. அதோடு அடிக்கடி தென்னை மரங்களில் ஏறி பன்னாடைகளைச் சுத்தம் செய்து கொண்டிருந்ததால் விளைவும் கூடுதலாக இருந்தது. இப்போது அவ்விதம் இல்லாததால் குறைந்துவிட்டது என்று சொல்கிறார்கள். இதை அரசாங்கம் பரிசிலனை செய்யுமா ?

கனம் திரு. பூ. கக்கன் : இந்தக் காரணங்களைக் கனம் அங்கத்தினர் அவர்களுக்குச் சொல்லியிருக்கலாம். அரசாங்கத்தினிடத்தில் இந்த விவரங்கள் வரவில்லை.

திரு. மா. தண்டாயுதபாணி : தஞ்சை ஜில்லாவில் வேப்பங்குளம் என்ற கிராமத்தில் தென்னை மரங்கள் இருக்கக்கூடிய ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்பு சர்க்காரில் இருக்கிறது. அதில் பல ஆராய்ச்சிகளும் செய்யப்பட்டு வருகின்றன. ஆகவே இப்போது அமைப்பட்ட ஆராய்ச்சி நிலையத்தை இங்கேயே வைத்திருக்கலாமே, இப்போது வைத்திருக்கும் தம்பிக்கோட்டை பகுதி தனிப்பட்டவர்களின் நிலமா, அதற்கு அரசாங்கம் ஏதாவது மானியம் வழங்குகிறதா என்பதையும் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

கனம் திரு. பூ. கக்கன் : இப்போது அதிராம்பட்டினம் என்ற இடத்தில் ஆயிரம் ஏக்கர் இருக்கக்கூடிய இடத்தில் இந்த பரீட்சார்த்த சோதனை நிலையம் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. இந்த இடம் தனிப்பட்டவருடைய இடமா என்கின்ற தகவல் சர்க்காரிடம் இல்லை.

எலுமிச்சை மரங்கள்

*** 324 கேள்வி.—திரு. ஆ. கு. சுப்பையா :** கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் எந்தெந்த மாவட்டங்களில் எலுமிச்சை, சாத்துக்குடி மரங்களுக்கு அண்மையில் நோய் கண்டது ?

(இ) இதனைத் தடுப்பதற்கு அரசு எடுத்த நடவடிக்கை என்ன ?

17th March 1966]

கனம் திரு. பூ. கக்கன் : (அ) திருநெல்வேலி, சேலம் மாவட்டங்களில் எலுமிச்சை, சாத்துக்குடி மரங்கள் 'டிக்லேன்' (Decline) என்னும் நோயால் பாதிக்கப்பட்டுள்ளன.

(இ) மாநில வேளாண்மைத்துறை வளர்ச்சிப் பணியாளர்கள் இந்நோயின் தாக்குதலைக் கட்டுப்படுத்தும் பொருட்டு பரிகார ஏற்பாடுகளை உரிய காலத்தில் மேற்கொண்டுள்ளனர். இவ்வியாதியைப்பற்றி ஆராய்ச்சிகள் நடந்து வருகின்றன. சிகிச்சையின் திறனை விளக்குவதற்காக, திருநெல்வேலி மாவட்டம் கடையத்தில் குடியானவர்களுடைய நிலங்களில் காட்சிப் பகுதிகள் (Demonstration Plots) அமைக்கப்பட்டுள்ளன. அந்தந்த வேளாண்மைக் கிடங்குகளில் அவசியமான ரசாயன மருந்து இருப்புகள் போதிய அளவில் இருக்க வகை செய்யப்பட்டுள்ளது.

திரு. ஆ. கு. சுப்பையா : சார், எத்தனை ஏக்கர் நிலத்தில் எலுமிச்சை, சாத்துக்குடி சாகுபடி செய்யப்படுகிறது ?

THE HON. SRI P. KAKKAN : The total area under lime and sathukudi is roughly 6,000 acres.

திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் : தலைவர் அவர்களே, எவ்வளவு தான் சிரமப்பட்டு பக்குவமாகச் சாத்துக்குடியை சாகுபடி செய்தாலும், நகரி, சாத்துக்குடியைத்தான் எல்லோரும் விரும்பி வாங்குகிறார்கள். இதைவிட பிற வகை சாத்துக்குடி நன்றாக இருந்தாலும் வாங்குவதில்லை. இதற்கு என்ன காரணம் ?

கனம் திரு. பூ. கக்கன் : என்ன காரணம் என்பதை நான் சொல்ல முடியாது. சாதாரணமாக சாத்துக்குடி நல்ல கனமாக இருந்தால் நல்ல சாறு கிடைக்கும். அதற்காக கனமுள்ளதைப் பார்த்து மக்கள் வாங்குவார்கள்.

மாவட்டக் கழக மருத்துவ மனைகள்

* 325 கேள்வி.—**திரு. வி. எஸ். எஸ். மணி :** கனம் சுகாதார அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள மாவட்டக் கழக மருத்துவ மனைகள் அனைத்தும் அரசாங்க நிர்வாகத்தில் எடுத்துக் கொள்ளப்பட்டனவா ?

(இ) இல்லையெனில், இன்னும் எடுத்துக் கொள்ளப்பட வேண்டியவை எத்தனை ?

(உ) எடுத்துக்கொள்ளப்பட்ட மருத்துவ மனைகளின் பணியாளர்களுக்கும், எடுத்துக் கொள்ளப்படவிருக்கும் ஏனைய மருத்துவ மனைகளின் பணியாளர்களுக்கும் ஒரே வீதத்தில் சம்பளம் அளிக்கப்படுகிறதா ?

(எ) இல்லையென்றால், அதன் காரணங்கள் யாவை ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : (அ) ஆம்.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.